# විදේශ සම්පත් දෙපාර්තමේන්තුව
# வெளிநாட்டுவளங்கள்திணைக்களம்
# Department of External Resources

මුදල්අමාත්‍යාංශය
මහලේකම් කාර්යාලය (3වැනි මහල),තැ.පෙ. 277,කොළඹ00100, ශ්‍රී ලංකාව

நிதிஅமைச்சு
செயலகம் (3ஆம் மாடி),த. பெ. இல. 277, கொழும்பு 00100,இலங்கை

Ministry of Finance
The Secretariat(3rdFloor), P.O. Box 277, Colombo 00100, Sri Lanka

**Web Site**:www.erd.gov.lk **e-mail:**info@erd.gov.lk


---

## ஊடக அறிக்கை

## சுகாதார முறைமை மேம்பாட்டுக் கருத்திட்டத்தின் மேலதிக நிதியளிப்புக்காக ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ஐ.அ.டொ. 110 மில்லியன் நிதி உதவி

"சுகாதார முறைமை மேம்பாட்டுக் கருத்திட்டத்தின் மேலதிக நிதியளிப்பு" இனைச் செயற்படுத்துவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ஐ.அ.டொ. 110 மில்லியனை கடனாகப் பெறுவதற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் முகாமைசெய்யப்படும் வறுமைத் தணிப்புக்கான யப்பானிய நிதியத்தினால் (Japanese Fund for Poverty Reduction -JFPR), வழங்கப்படும் ஐ.அ.டொ. 03 மில்லியனை மானியமாகப் பெறுவதற்கும் இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

2020 இன் ஆரம்பத்தில், கொவிட் - 19 தொற்றுநோய் பரவலுடன், மூலக்கூறு உயிரியல் ஆய்கூடத்தின் கொள்திறனை அதிகரித்தல், மருத்துவமனைகளில் அவசர மருத்துவ உபகரணங்களுக்கான பெறுகையினை அதிகரித்தல், தீவிர சிகிச்சை பிரிவுகளை விரிவுபடுத்துதல், ஒக்ஸிசன் கிடைப்பனவினை விரிவுபடுத்தல் மற்றும் முகக்கவசங்கள், தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் பொலிமரேஸ் சங்கிலி எதிர்வினை (பிசிஆர்) பரிசோதனைக்கான உலைகளும் பிற நுகர்பொருட்களும் மற்றும் கொவிட் -19 நோய் பரிசோதனை போன்ற அவசர நடவடிக்கைகளுக்கு தற்பொழுது செயற்படுத்தப்பட்டுவரும் சுகாதார முறைமை மேம்பாட்டுக் கருத்திட்டத்திலிருந்து ஐ.அ.டொ. 15 மில்லியன் மீண்டும் ஒதுகீடு செய்யப்பட்டது.

கொவிட் -19 தொற்றுநோயின் மூன்றாவது அலையினைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கத்தின் அவசர நிதித் தேவைகளை நிவர்த்தி செய்வதன் மூலமும், குறிப்பாக ஆரம்ப சுகாதாரப் பராமரிப்பு அபிவிருத்தியுடன் தொடர்புடைய நடவடிக்கைகளை நிறைவு செய்வதற்கு மேலதிகமாக ஒதுக்கீடுசெய்யப்பட்ட நிதிகளை நிரப்புவதன் மூலமும் சிறப்பாக செயற்படும் திட்டத்தின் விளைவுகளை அளவிட மேலதிக நிதி பயன்படுத்தப்படும்.

அசல் மற்றும் மேலதிகமாக நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்களின் ஒட்டுமொத்த தாக்கம் அசல் கருத்திட்ட தாக்கத்துடன் தொடர்ந்து சீரமைக்கப்படுவதுடன், இது மிகவும் விரிவான ஆரம்ப சுகாதார பராமரிப்பு முறைமை மற்றும் கொவிட் -19 தொற்றுநோய் முகாமைத்துவத்திற்கு ஆதரவளித்தல் என்பவற்றை உறுதிப்படுத்தியதொரு ஆரோக்கியமான தேசத்தை உருவாக்குகிறது. மொத்த கருத்திட்டச் செலவினம் அரசாங்க பங்களிப்பான ஐ.அ.டொ. 10 மில்லியன் உள்ளடங்களாக ஐ.அ.டொ. 123 மில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளது. இக்கருத்திட்டத்தினை 2025 நவம்பர் 30 ஆந் திகதியளவில் நிறைவுசெய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

சுகாதார முறைமை மேம்பாட்டுக் கருத்திட்டத்தின் மேலதிக நிதியளிப்புக்காக முறையே ஐ.அ.டொ. 110 மில்லியன் கடன் மற்றும் ஐ.அ.டொ. 03 மில்லியன் மானியம் பெறுவதற்கான கடன் உடன்படிக்கை மற்றும் மானிய உடன்படிக்கை என்பவற்றில் இலங்கை அரசாங்கத்தின் சார்பில் நிதி அமைச்சின் செயலாளர் திரு எஸ்.ஆர். ஆட்டிகல மற்றும் ஆ.அ.வ. வதிவிட தூதரக நாட்டுப் பணிப்பாளர் திரு. சென் சென் ஆகியோர் 2021 ஒக்ரோபர் 07 ஆந் திகதி கையொப்பமிட்டனர்.


| | | | | | |
|---|---|---|---|---|---|
| **අධ්‍යක්ෂ ජනරාල්**<br>**பணிப்பாளர் நாயகம்**<br>**Director General** | **94-11-2484693** | **කාර්යාලය**<br>**அலுவலகம்**<br>**Office** | **94-11-2484500**<br>**94-11-2484600** | **ෆැක්ස්**<br>**අංකය**<br>**தொலைநகல்**<br>**Fax** | **94-11-2447633**<br>**94-11-2387153**<br>**94-11-2434876** |